


**13. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஐரோப்பிய யூனியனுடனான இந்தியாவின் நட்புறவை தமது ஃபிரான்ஸ், ஸ்லோவேக்கியா நாட்டு பயணங்கள் வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வைகை அணை பகுதியில் வணிக நோக்கில் மணல் அள்ளுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் எச்சரித்துள்ளார்.

3. தமிழக நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் கூறியுள்ளார்.

4. வேலூர் மாவட்டத்தில் மாம்பழ கூழ் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி அறிவித்துள்ளார்.

5. பாலியல் குற்றங்களை தடுக்க குற்றவாளிகளை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கும் வகையில் தனி சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் திரு.வைகோ கூறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

***************

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி 6 நாள் அரசுமுறை பயணமாக ஃபிரான்ஸ், ஸ்லோவாக்கியா நாடுகளுக்கு இன்று புறப்பட்டு சென்றார்.

முன்னதாக பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் இந்தியா - ஃபிரான்ஸ் இடையிலான கலாச்சாரம் மற்றும் பொருளாதார பிணைப்புகள் தமது பயணம் மூலம் மேலும் வலுப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் நட்புறவு நாடுகளில் .ஃபிரான்ஸ் நாட்டிற்கு தனித்துவ இடம் உள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஃபிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுடன் இணைந்து நாளை பாரத புத்தாக்க திறன் மாநாட்டை தாம் தொடங்கிவைக்க இருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான முதலீடுகளுக்கும், நம் நாட்டின் உயர்கல்வி வாய்ப்புகளுக்கும் இந்த மாநாடு திறவுகோலாக அமையும் என்று எடுத்துரைத்தார்.

இதனை தொடர்ந்து ஸ்லோவேக்கியா செல்லும் பிரதமர் இருதரப்பு உறவுகள் குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

தமது பயணத்தின் மூன்றாம் கட்டமாக ஃபிரான்ஸ் நாட்டின் எவியன் நகரில் வரும் 16, 17ஆம் தேதிகளில் ஜி.7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவிற்கு தொடர்ந்து 8ஆவது முறையாக அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உச்சி மாநாட்டிற்கு பின்னர் பாரீஸ் செல்லும் பிரதமர் அங்கு விவா தொழில்நுட்ப மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்திய வம்சாவளியினருடனும் அவர் கலந்துரையாடுகிறார். பிரதமரின் இந்த பயணம் ஐரோப்பா உடனான நம் நாட்டின் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

***************

பிரதமர் - சாதனை

நாட்டின் இளையோர் கடந்த 12 ஆண்டுகளில் அறிவியல் தொழில்நுட்பம் முதல், விண்வெளி வரை, பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இளையோர் முன்னெடுப்பால் உலகின் முன்னனி ஸ்டார்ட் அப் இலக்குகளை இந்தியா எட்டி வருவதாக பிரதமர் சமூகவலைதள பதிவில் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

சிறிய கிராமங்கள், நகரங்கள் முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இளையோரின் சாதனைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் சிறுகுறு நடுத்தர தொழில்கள் நிறுவனங்களில் இளையோரின் பங்களிப்பு குறித்து இதன் திருச்சி மாவட்ட துணை தலைவர் திரு. T. ராஜாராம் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

வாய்ஸ்

***************

ராஜ்நாத்சிங்

மாறிவரும் பாதுகாப்பு சூழலுக்கு ஏற்ப, புதிய போர் தொழில்நுட்பங்களை, இந்திய விமான படையினர் திறம்பட

கையாள்வதன் அவசியத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாத்தில் இந்திய விமான படை அகாடமியின் ஒருங்கிணைந்த பயிற்சி படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு இன்று உரையாற்றிய அமைச்சர், ட்ரோன், செயற்கைகோள் ரோபோட்டிக்ஸ், ரேடார் உள்ளிட்ட அதி நவீன தொழில்நுட்பங்களில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

புதுமையான யுக்திகள், கண்காணிப்பு, தொடர் கற்றலின் தேவையையும் அவர் வலியறுத்தினார்.

இந்நிகழ்வில் தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயிற்சி பெற்ற முதலாவது மகளிர் படையினரின் செயல்பாட்டையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

எவ்வித சவாலையும் எதிர்கொண்டு கடின உழைப்புடனும், கூர்மையான அறிவுடனும் செயலாற்றி ராணுவ நுட்பங்களை வளர்த்துக்கொள்ள திரு.ராஜ்நாத் சிங் அறிவுறுத்தினார்.

வான் சாகச நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

***************

நிர்மல் குமார்

மத்திய அரசின் அனுமதிக்கு பின்னர் வைகை அணையை தூர்வாருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் ஆன்டிபட்டியில் இதுதொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நீர் தேக்க பகுதியில் தேங்கியுள்ள வண்டல் மண்ணை வேளாண் பயன்பாட்டிற்கு மட்டுமே எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வர்த்தக நோக்கில் மணல் அல்ல முயற்சி செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

மேகமலை வனப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

வாய்ஸ்

***************

மரிய வில்சன்

தமிழகத்தின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை விரைவில் முதலமைச்சர் வெளியிடுவார் என்று மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக நிதிநிலை அறிக்கையை விரைவில் எதிர்பார்க்கலாம் என்றும், அது நல்லவிதமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

நெல்லை மாவட்ட ஆய்வு கூட்டத்தில் கலந்துகொள்ள இருப்பதாகவும், அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அதிகாரிகளுடன் இன்று ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

***************

ஆதவ் அர்ஜூனா

குழந்தை திருமண தடுப்பு நடவடிக்கையில் தமிழகம் முதன்மை மாநிலமாக செயல்படுவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை விவகாரத்தில் இரு மாநில விவசாயிகளின் தண்ணீர் தேவை கருத்தில் கொள்ளப்படும் என்றார்.

***************

குமார்

தமிழகத்தில் இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பயிற்சிகளை வழங்கி 5 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதே அரசின் முதன்மை இலக்கு என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளின் புனரமைப்பு பணிகளை இன்று ஆய்வு செய்த அவர், இப்பகுதியில் மழைக்காலங்களில் நீர் தேங்கும் பிரச்சனையை களைய ஆயிரத்து 250 மீட்டர் தூரத்திற்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வடிகால் பணிகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

மழைக்கு முன்னதாகவே இப்பணிகளை முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

திருவள்ளூர் மாவட்டத்தின் முக்கிய பிரச்சனைகளான மின் தடை, சாலை அமைத்தல், குடிநீர் வசதி போன்றவற்றை சரி செய்ய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

***************

விஜய் பாலாஜி

வேலூர் மாவட்டத்தில் மாம்பழ கூழ் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்ட வளர்ச்சி திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், பாதாள சாக்கடை திட்டம் சாலை வசதிகள், தடையற்ற குடிநீர் விநியோகம் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிறைவேற்ற கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றார்.

மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழில்துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கூறிய அமைச்சர் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படதாக வகையில் மகி மண்டலம் பகுதியில் சிப்காட் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்றார்.

***************

வைகோ

தமிழகத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியில் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க பணியாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழக அரசின் கடந்த ஒருமாத கால ஆட்சி சிறப்பாக உள்ளதாக குறிப்பிட்டார்.

பாலியல் குற்றங்களை தடுக்க குற்றவாளிகளை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கும் வகையில் தனி சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கூறினார்.

மேகதாது விவகாரத்தில் கர்நாடக அரசுக்கு மத்திய அரசு மறைமுகமாக உதவி செய்வதாகவும் அவர் குறை கூறினார்.

வரும் 27ஆம் தேதி கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என்றார்.

முன்னதாக மேட்டமலை பகுதியில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை அவர் துவக்கிவைத்தார்.

***************

ஆவின்

தமிழகத்தில் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப பால் விநியோகம் தடையின்றி நடைபெறுவதாக அரசு அறிவித்துள்ளது.

ஆவின் நிறுவனத்தின் பச்சை நிற பால் பாக்கெட் விநியோகம் நிறுத்தப்பட்டதாக வரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், எந்த ஒரு பால் வகையின் விநியோகமும் குறைக்கப்படவில்லை என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

***************

லோக் அதாலத்

தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் தமிழகத்தில் இன்று நடைபெறுகிறது.

ஜீவநாம்சம், காசோலை மோசடி, வாகன விபத்து இழப்பீடு உள்ளிட்ட நிலுவையில் உள்ள பல்வேறு வழக்குகளுக்கு இதில் சமரச தீர்வு எட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

***************

யாத்திரி சுவிதா திவஸ்

நாடுமுழுவதும் அனைத்து விமான நிலையங்களிலும் நாளை மறுநாள் விமான பயணிகளின் நலனை முன்னெடுக்கும் "யாத்திரி சுவிதா தினம்" நிகழ்ச்சி நடைபெற உள்ள நிலையில் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பில் கோவை விமான நிலைய விரிவாக்க பணிகள் நடைபெற்று வருவதாக இதன் இயக்குனர் முகமது ஆரிஃப் தெரிவித்துள்ளார்.

விமான பயணிகளுக்கு சிறந்த சேவையின் ஒருபகுதியாக மருத்துவ பரிசோதனைகள், வேலை வாய்ப்பு ஆலோசனை, குழந்தைகளுக்கான ஓவிய போட்டி உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

***************

இருவாரி

நீலகிரி மாவட்டத்தை ரேபிஸ் நோயில்லாத மாவட்டமாக மேம்படுத்த முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா கூறியுள்ளார்.

உதகையில் நாய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் ரேபிஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள், நாய்களுடன் பழகும்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளிட்டவைகள் குறித்து குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

***************

குற்றாலம்

மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில் மழை காரணமாக குற்றால அருவிகளில் நீர் வரத்து அதிகரித்து சீசன் தொடங்கியுள்ளது.

பிரதான அருவி, ஐந்தருவி, புலியருவி, சிற்றருவி, பழைய குற்றாலம் உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கணிசமாக கொட்டுகிறது.

பராமரிப்பு பணிகள் காரணமாக பிரதான அருவியில் விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கப்பட்டதை அடுத்து சுற்றுலா பயணிகள் அனைத்து அருவிகளிலும் மகிழ்ச்சியுடன் குளித்து செல்வதாக எமது தென்காசி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

கடலூர்

கடலூர் சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோவில் ஆனி திருமஞ்சன விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

***************

கிரிக்கெட்

தரம்சாலாவில் இந்திய ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மழை காரணமாக தாமதமடைந்துள்ளது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது